**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்**

**MCOP. No. 67/2025**

**05.03.2026**

**திருமதி . சுதா , க/பெ. கலைச்செல்வன்**

PW : 1

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். விபத்து பற்றி நான் கேள்விப்பட்டதன் அடிப்படையிலும் யூகத்தின் அடிப்படையிலும் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் கொடுத்த முதல் தகவல் அறிக்கையில் 1 ம் எதிர்மனுதாரரின் வாகனம் எண் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல நான் வாகன எண்ணை குறிப்பிட்டு சொன்னேன். இந்த விபத்து சம்பந்தமான புகார் நான் எழுத்துப்பூர்வமாக கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் பேரில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

முதல் தகவல் அறிக்கையில் வாகன எண் இல்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. இந்த விபத்து சம்பந்தமாக வேறு எந்த வாகனம் எதுவும் ஈடுபடவில்லை என்றால் சரிதான். என் கணவர் தான் இருச்சக்கர வாகனத்தை ஓட்டினார் என்றால் சரிதான். 1 ம் எதிர்மனுதாரர் நந்தினி யார் என்றால் என் உறவினர். 1 ம் எதிர்மனுதாரரான நந்தினிக்கு மருந்து வாங்குவதற்காக அவரது வாகனத்தை எடுத்து சென்றார். முதல் தகவல் அறிக்கையில் மேற்படி விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

என் கணவருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் அவருக்கு மருந்து வாங்குவதற்காக எங்களது சொந்த வாகனத்தை எடுத்து சென்றதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் குறுக்கே ஒருவர் வந்தார் என நான் குறிப்பிட்டுள்ள நபர் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் விபத்திற்கு முன்பாகவே அவருக்கு உடல்நிலை சரியில்லாததால் வேலையே விட்டுவிட்டு உடல்நிலையை பார்த்துக்கொண்டிருந்தார் என்றால் சரிதான்.

குற்ற வழக்கு சம்பந்தமாக இறுதி அறிக்கை தாக்கல் செய்த விவரமும், வழக்கின் முடிவின் விவரமோ எனக்கு ஏதேனும் தெரியுமா என்றால் தெரியாது. என் கணவருடன் பிறந்தவர்கள் மூன்று நபர்கள். என் மாமியார் தனலெட்சுமி மற்ற பிள்ளைகளுடன் பேச்சு வார்த்தையால் இருக்கிறார் என்றால் சரிதான். நான் வீட்டுவேலை செய்து வருகிறேன். என் கணவர் மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே இறந்து விட்டார். என் கணவர்

விபத்து சமயத்தில் மது அருந்தி இருந்தார் என்ற விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் என் கணவர் மது அருந்தமாட்டார். என் கணவரின் பிரேத பரிசோதனை அறிக்கை விவரத்தில் மது அருந்திய விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் கணவர் மது அருந்திவிட்டு தட்டுதடுமாறி வாகனத்தை ஓட்டிவந்து விபத்திற்கு காரணமாக இருந்தார் என்றால் சரியல்ல.

இந்த வாகனத்திற்குரிய காப்பீட்டில் ஓட்டுநருக்கான காப்பீடு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை பொறுத்து என் கணவர் ஓட்டுநரோ, உரிமையாளரோ அல்லது 3ம் தரப்பினரோ இல்லை என்றால் சரியல்ல. என் கணவரின் இறப்பினால் எங்கள் குடும்பத்தில் வருமான இழப்பு ஏற்படவில்லை என்றாலும் நாங்கள் யாரும் அவரை சார்ந்த இருக்கவில்லை என்றாலும் சரியல்ல. இந்த விபத்தை பொருத்தவரை இறந்த என் கணவர் தான் Tortfeasor என்பதால் அவரது இறப்பை பொருத்து நாங்கள் இழப்பீடு பெற தகுதியுடையவர்கள் என்றால் சரியல்ல.

அதற்கான கோரிக்கை உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. கோரியுள்ள இழப்பீடு மிகையானது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கிற்கும் முதல் தகவல் அறிக்கைக்கும் முரண்பாடு இருப்பதால் இம்மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.03.05 11:06:11 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்